
தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 8 **2008 மார்ச்** கனி 4

## FORM IV

1. Place of Publication : Batlagundu.
2. Periodicity of its Publication : Monthly.
3. Printer's Name : R.Sathiyamoorthi.
4. Address : 14/13/24 Melamanthai St., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu.
5. Whether citizen of India : Yes.
6. Publisher's Name : B.Arjunan.
7. Address : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu.
8. Editor's Name : B.Arjunan.
9. Address : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu.


I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:29.02.2008 Signature of Publisher.




## ஒரு சிந்தனை



கிறிஸ்து தம்முடைய தனிப்பட்ட ஊழியத்தில்

தகுதியுடையவனை அழைக்கவில்லை.

அழைக்கப்பட்டவனை அவர் தகுதிப்படுத்தினார்!

சபை இதே காரியத்தையே செய்யவேண்டும்.

சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டவர்கள்

அதற்காக பயிற்றுவிக்கப்பட்டு

ஊழியஞ்செய்யும் நிலைக்குள்ளாக

வழிநடத்தப்பட வேண்டும்.

-from "Mountain Echoes"

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16


**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 8 மார்ச் - 2008 கனி - 4


ஆசிரியருரை

# நீதியின் கிரீடம்

## THE CROWN OF RIGHTEOUSNESS



நீதியின் கிரீடம் யாருக்கு, எப்படிப்பட்டவர்களுக்கு கிடைக்கும்? என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். அப்போஸ்தலனாகிய பவுல் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்று எழுதுகிறார் (2தீமோ.4:7,8). இந்த நீதியின் கிரீடம் ஒரு சாராருக்கு மட்டுமல்ல யாவருக்கும் வைக்கப்பட்டுள்ளது. இதைப்பெற்றுக்கொள்ள நாம் செய்யவேண்டுவதென்ன? ஒவ்வொருநாளும் அதற்காக பிரயாசம் கொள்ளவேண்டும். பெற்றுக்கொள்வதற்கான வழியை பவுல் மேற்கண்ட வசனத்தில் போதிக்கிறார்.

**முதலாவது நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும்.** அது என்ன நல்ல போராட்டம் என்று நீங்கள் நினைக்கலாம். அதற்கான பதிலை பவுல் எழுதிய கொரிந்து புஸ்தகத்தில் வாசிக்கிறோம். "பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என்

சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்கிறார் (1கொரி.9:24-27). நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வது சதாரண விஷயம் அல்ல. அதற்கு இச்சையடக்கம் தேவை. உலகப்பிரகாரமான பந்தயச்சாலையில் ஓடுகிறவர்களே மிகவும் கவனத்துடன் இருந்து எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருக்கும்போது வாடாத ஜீவகிரீடத்தை அதாவது நீதியின் கிரீடத்தை பெறவிரும்புகிறவர்கள் இச்சையடக்கமாயிருக்கவேண்டியது எத்தனை அவசியம்!

நல்ல போராட்டத்தைப்போராடும்போது அநேக பாடுகள் வருகிறது. எடுத்துக்காட்டாக பாருங்கள் பவுலின் வாழ்க்கையில் அநேக பாடுகள்; "அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்;... நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும்போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது" என்கிறார் (2கொரி.11:23-28). இன்றைக்கு கஷ்டப்பட்டவுடன் அப்பப்பா எவ்வளவு கஷ்டம் என்று சலித்துக்கொள்கிறோம். பவுலுடைய வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நாம் என்ன துன்பத்தை அநுபவித்திருக்கிறோம்? நம்முடைய துன்பமெல்லாம் ஐந்து சதவீதம் கூட இல்லை. இத்தனை பாடுகளையும் பவுல் கிறிஸ்துவின் ராஜ்யமாகிய சபைக்காக அநுபவித்தார். அவர் அன்று சுகபோகமாக வாழ்ந்து இருக்கமுடியும். ஆனால் நல்லபோராட்டத்தைபோராடவேண்டும், நீதியின் கிரீடத்தைப் பெறவேண்டும் என்பதற்காகவே ஆகாயத்தில் சிலம்பம்பண்ணாமல் நல்யுத்தம் செய்தார்.

நல்லபோராட்டம் பண்ணும்போது அநேக சோதனைகள் வரும். ஆண்டவர் இயேசுவின் நாட்களில் "சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர்

பிரதியுத்தரமாக; மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான்." (மத்.4:3-11). இயேசு கிறிஸ்து நம்மைப்போல மாம்சத்திலே பூமிக்கு வந்தார். அவருக்கும் மாம்சத்தில் பாடுகள், சோதனைகள் வந்தது. அவைகளை தேவனுடைய வல்லமையுள்ள வசனத்தினாலே ஜெயித்தார். நல்லபோராட்டம் பண்ணவிரும்புகிற ஒவ்வொருவரும் இவ்விதமாக கர்த்தருடைய வசனத்தினாலே நமக்கு வரும் சோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

மேலும், 2கொரி.4:7 ல் வாசிக்கிறோம்; **நல்ல போராட்டத்தைப் போராடின பவுல் ஓட்டத்தையும் முடித்தார்.** ஓட்டத்தை முடிப்பவனே பந்தயப் பொருளைப் பெறுவான். நாமும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடவேண்டும். இந்த ஓட்டம் வீணான ஓட்டமாக போய்விடக்கூடாது. பவுல் சொல்லும்போது; "நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்" என்கிறார் (கலா.2:2). ஒரு காரியத்தை செய்வதற்கு முன் யோசிக்கவேண்டும். என்னவென்று? அதை நேர்த்தியாக, பிரயோஜனமாக செய்யவேண்டுமென்று. இன்றைக்கு நாங்கள் அதைச் செய்கிறோம், இதைச்செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள் ஆனால் ஒன்றையும் சரிவர செய்வதில்லை. கர்த்தர் நம்மிடத்தில் கொடுத்தவற்றை சிறப்பாக செய்யவேண்டுமெனில் எண்ணிக்கையுள்ளவர்களுக்கு பிரசங்கித்து, விவரித்துக்காண்பிக்க வேண்டும். ஓட்டத்தை முடித்த சிலரை அப்போஸ்தலனாகிய யோவான் காண்கிறார். "அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து

வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக் குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியா னவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார் என்றான்" *(வெளி.7:13-17)*. துவக்கம் ஒன்று இருந்தால் அதற்கு முடிவு ஒன்று உண்டு. ஆகையால் தான் வேதம் இவ்வாறாக போதிக்கிறது "முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" *(மத்.24:13)*. ஆனபடியால் முடிவு பரியந்தம் நிலைநிற்க பிரயாசப்படுங்கள்.

**மேலும், 2கொரி.*4:7* ல் வாசிக்கிறோம்; விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்கிறார்.** விசுவாசத்திற்குத் தான் எத்தனை போராட்டங்கள். யூதா சொல்கிறார்; ' ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப்போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது" *(யூதா3)*. இந்த விசுவாசத்திற்காக போராட முடியாமல் அநேகர் வீழ்ந்துபோகிறார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? கற்பாறையில் விதைக்கப்பட்ட விதையைப்போலும், முள்ளுகளுக்குள் விதைக்கப்பட்ட விதையைப்போலும், வழியருகே விதைக்கப்பட்ட விதையைப்போலும் போய்விடுகிறார்கள். தொடர்ந்து யூதா எழுதும்போது; நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" என்கிறார் *(2தீமோ.1:14)*. கர்த்தருடைய வல்லமையுள்ள வசனத்தை பெற்றுக்கொண்ட தேவமனிதன், அதை பரிசுத்த ஆவியானவருடைய உதவியுடன் பாதுகாத்துக்கொண்டு, அவன் ஜெபத்திலும், உபவாசத்திலும், தேவனுக்கு பயப்படுகிற பயத்திலும் வளர்ச்சியடையும்போது அவனுடைய விசுவாசம் பாதுகாக்கப்படும்.


மேலும், 2கொரி.4:8 ல் வாசிக்கிறோம்; 'இது முதல் நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது' ஒரு கிறிஸ்தவனுக்கு அழியாத நம்பிக்கையுண்டு. அது எதுவாகத்தானிருக்க முடியும்? தேவனோடு வாழும் பாக்கியம். உலகத்தில் மனிதன் பிறக்கும்போது நிர்வாணியாய் பிறக்கிறான் நிர்வாணியாய் மரிக்கிறான் . அவன் பிரயாசப்பட்டது ஒன்றையும் கொண்டுபோகான். ஆனால், அவனுடைய ஆத்துமா தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்த ஆத்துமா நல்லபோராட்டத்தை போராடின ஆத்துமாவாகவும், ஓட்டத்தை முடித்த ஆத்துமாவாகவும், விசுவாசத்தைக் காத்துக்கொண்ட ஆத்துமாவாகவும் இருக்கும் போது அது நீதியின் கிரீடத்தை பெற்றுக்கொள்ள தகுதியுள்ள ஆத்துமாவாக மாறுகிறது. கர்த்தர் அந்நாளிலே அதை தந்தருளுவார் என பவுல் எழுதிவிட்டு நாம் கவனிக்கவேண்டிய ஒரு கருத்தைச் சொல்லுகிறார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். தேவன் பட்சபாதமற்றவர். நீதியின் கிரீடத்தை யாரெல்லாம் விரும்புகிறார்களோ அவர்கள் யாவருக்கும் அதைத்தந்தருளுவார். இவைகளை பெற்றுக்கொள்ள வாஞ்சிக்கும் பவுல். ஒன்றைங்குறித்துக் கவலைப்படேன், என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் என்கிறார். உங்களுடைய விருப்பம் எப்படிப்பட்டது?

நூறு சதவீதம் நம்பிக்கையூட்டும் வசனத்தை வாசித்து இச்செய்தியை நிறைவு செய்வோம். "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப் படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" என்கிறார் (வெளி.2:10). ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளு கிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை. நீங்கள் சேதப்படாமல் காக்கப்பட பவுலைப்போல நல்லபோராட்டத்தைப் போராடுங்கள். உங்களுக்கா நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை உங்களுக்குத் தந்தருளுவாராக!

**இருதயத்தைப் பெலப்படுத்துவதற்கு கீழ் நிலையை அடைந்து ஜனங்களை மேல் நிலைக்குத் தூக்கிவிடுவதைக் காட்டிலும் வேறொரு நல்ல பயிற்சி கிடையாது - TVOTI**

# பிரசங்கியார்களுக்குப் பயிற்சி
# Training Preachers

-J.C.Choate



பிரசங்கியார்களுக்கு பயிற்சி அளிப்பதின் அவசியத்தை பற்றி சிந்திப்போம். நாம் முன்னமே சொன்னபடி பிரசங்கியார்கள் தானாகவே வருவதில்லை. கர்த்தரும் அவர்களுடைய மனங்களைத் திறந்து அந்தந்த வாரம்செய்ய வேண்டிய பிரசங்கத்தை ஊற்றுவதில்லை. நல்ல பிரசங்கியார்கள் அநேக வருஷ கடின உழைப்பினால் உருவாகிறார்கள். இளம் பிரசங்கிகள் தங்களுடைய வேதத்தை வாசித்து கற்று தாங்கள் சார்ந்திருக்கும் பிராந்திய சபையில் அநேக வழிகளில் உதவியாய் இருக்கலாம். பிரசங்கியார் பயிற்சி பள்ளி அங்கே இருக்குமானால் சென்று இரண்டு மூன்று ஆண்டு படிக்கலாம்.

ஆனால் பொதுவாக பிரசங்கியார்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சியைப்பற்றி எப்படி? நாடெங்கிலும் உள்ள பிரசங்கியார்கள் தேவையான பயிற்சி பெற்றுக்கொள்ளும்படி எப்படி அவர்களுக்கு உதவலாம்.

பிராந்திய சபையே ஒருசிறந்த பிரசங்கியார் பயிற்சிபள்ளி. அங்கே கொடுக்கப்படுகின்ற பயிற்சி எப்போதும் கிடைக்கும். ஒருவருக்கு அல்லது எத்தனைப்பேருக்கு வேண்டுமானாலும் பயிற்சி அளிக்கலாம். பிராந்திய சபையார் தங்களிடமுள்ள வாலிபர்களை பிரசங்கிக்கும்படி உற்சாகப்படுத்தலாம். ஆம் அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மருத்துவராக, ஆசிரியர்களாக, வழக்கறிஞர்களாக, வியாபாரிகளாக அல்லது மற்ற பெரிய வேலைகளில் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள், ஏனென்றால் அப்படிப்பட்ட வேலைகளில் நல்ல வருவாயும் சமூக அங்கீகாரமும் இருப்பதே அதற்குக் காரணம். ஆனால் வாழ்க்கையில் அதிக பணம் சம்பாதிப்பதைக் காட்டிலும் நிறைய உண்டு. நீங்கள் ஏன் உங்கள் வாலிபர்களையும் உங்கள் வாலிப ஸ்திரீகளையும் பிரசங்கியார்களுடைய மனைவிமார்களையும் உற்சாகப்படுத்தக் கூடாது. போதிப்பதும் கர்த்தருடைய பணியைச் செய்வதுமே இந்த உலகத்தில் மிகப்பெரிய வேலை. பிரசங்கியாராக இருப்பதென்பது கனத்துக்குரிய ஏற்புடைய வேலை. இதிலே அதிகமான சம்பளம் கிடைக்காமலிருக்கலாம் அநேக தியாகம் செய்ய வேண்டியிருக்கலாம் அந்த சூழ்நிலையிலும் இது தகுதியான வேலை. சபையில் உள்ளவர்கள் தங்கள் வாலிபர்களையும்

வாலிப பெண்களையும் இந்த திசையில் ஊக்கப்படுத்தினால் அபாரமான மாற்றத்தைக்காணலாம்.

சபையிலே ஒன்று இரண்டு வாலிபர் பிரசங்கியாராகும் பட்சத்தில் முழுசபையும் இதை ஊக்கப்படுத்தலாம். பலவிதமான கூட்டங்களில் அவர்களுக்கு வாய்ப்பளிக்கலாம். அவர்களுக்கென்று ஒரு பயிற்சி வகுப்பு இருந்தால் அங்கே அவர்கள் படித்து வேதவகுப்புகள் எடுத்து போதகர் அவைகளைக் கவனித்து அவர்களுக்கு ஆலோசனை சொல்லலாம். சபையினுடைய தலைவர்கள் அவர்களுக்கு அவ்வப்போது பிரசங்கிக்கும்படியான வாய்ப்பளிக்கலாம். அவர்கள் பிராந்திய சபையின் பிரசங்கியாரோடு வீடுகளைச் சந்திக்கச் செய்யலாம், வேத வினாப்போட்டிகளில் கலந்து கொண்டு வாலிபர்களை உற்சாகப்படுத்தலாம் மேலும் பல நற்காரியங்களைச் செய்யலாம். நாம் பிரசங்கிக்க விரும்புகிறவர்களுக்கு ஒரு பரிபூரணமான பயிற்சி கூடமாக பிராந்திய சபை இருக்க முடியும். நாடெங்கிலும் உள்ள கிறிஸ்துவின் சபைகள் இந்த விதமான பயிற்சியின் திட்டங்களை விருத்தி செய்யுமென்றால் தங்கள் சொந்த தேவைகளை பூர்த்தி செய்தது போக வெளியேயும் சென்று ஊழியம் செய்யும்படி அனுப்பலாம். பல வருஷங்களில் மிக அதிகமான பிரசங்கியார்களை உருவாக்கிய சபைகளை நான் அறிவேன். அதே சமயத்தில் ஒரு பிரசங்கியாரைக்கூட உருவாக்காத சபையையும் நான் அறிவேன். இந்த சபைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் என்ன? வெளிப்படையாகத் தெரிவது என்னவென்றால் பிரசங்கியார்களை உருவாக்கிய சபைகள் தங்கள் வாலிபர்களை பிரசங்கிக்கவும், அவர்கள் பிரசங்கியாராகவும் உருவாக உதவிய சபைகளே. பிரசங்கியார்களை உருவாக்காமலும் உருவாக்குவதற்கான பணிகளைச் செய்யாமலும் இருந்த சபைகள் தங்களிடமிருந்து பிரசங்கியார்களை அனுப்பாதவர்கள்.

வாலிபர்கள் பிரசங்கிக்கும்படியாக விஷேசித்த பயிற்சி அளிக்கக் கூடிய பள்ளிகளுக்குச்சென்று பயிற்சி பெறலாம். சக வாலிபர்களோடு சேர்ந்து விடுதியில் தங்கி வேத வகுப்புகளுக்குச் சென்று இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து படிக்ககூடிய இடமாக அது இருக்கும். அவர்களுடைய ஆசிரியர்கள் பிரசங்கியார்களாக இருப்பார்கள். அங்கே இருக்கும்போது தங்கள் ஆசிரியர்களோடும் மற்ற பிரசங்கியாரோடும் பிரசங்கிக்கிற வாய்ப்புகளைப் பெறலாம். இந்த விதமான பள்ளிகளில் படிப்பதினால் ஒருவர் திறமையான பிரசங்கியாராக வரமுடியாது. ஒவ்வொரு மாணவன் மீதும் அநேக பொறுப்புகள் சார்ந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் வெற்றிபெறும்படியாக மிகவும் கடினமாக தாங்கள் கற்றவைகளின்படி உழைக்க வேண்டும். மிகவும் சிறப்பாக செயல்படும்படி கற்று அவைகளை பயன்படுத்த வேண்டியது அவர்களைப் பொருத்ததே.

சபையானது வளர்ச்சியடையாத நிலையில் தேவைப்பட்டபடி தங்கள் பிரசங்கியார்களுக்கு பொருளாதார ரீதியில் உதவி செய்ய முடியாத நிலையில் தங்களிடமிருந்து பயிற்சி பெற்று வரும் இளம் பிரசங்கியார்களுக்கு அவர்கள் பொருளாதாரரீதியில் உதவி செய்யமுடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்யலாம்? ஒரே மாற்றுவழி மேல் நாடுகளிலிருந்து உதவியைப்பெறுவது. இதிலும் அநேக பிரச்சனைகள் இருப்பதால் இதுவே ஒரு சரியான தீர்வாகாது. கர்த்தரை நேசித்து அவருடைய வார்த்தைகளைப் பிரசங்கித்துக் கொண்டு அதே சமயத்தில் உதவியும் பெறுவதற்கு அநேக வழிகள் உண்டு. அப்படிப்பட்ட இளைஞர்கள் உலக சம்பந்தமான வேலைகளில் இருந்து கொண்டு சபையானது அவர்களுக்கு முழுமையாக உதவியளிக்கும்வரை பிரசங்கம் செய்யலாம். பின்பு சபையின் முழுஉதவியோடு முழுநேர ஊழியத்தைச் செய்யலாம்.

சபையானது வளர்ச்சியடையும்போது அதனுடைய அநேக அங்கத்தினர்களோடு ஒரு கிறிஸ்தவ கல்லூரியை நிறுவி குறிப்பிட்ட காலத்தில் இந்த விதமான அநேக கல்லூரிகள் வாலிப ஸ்திரீகளுக்கும் பயிற்சியும் கல்வியும் அளிக்கலாம். இடைப்பட்ட காலத்திலே ஒவ்வொரு பிரசங்கியாரும், சபையும் சுவிஷேசத்தை பிரசங்கிக்கும்படி, இந்த விதமான பயிற்சியை இளைஞர்களுக்கு அளிக்கும்படியான அவசியத்தை உணர்ந்து தங்கள் வாலிபர்களை இதற்காக தங்களால் ஆனதை செய்யும்படி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

வாலிபபிரசங்கியார்களாகிய தீமோத்தேயு, தீத்து மற்றும் அநேகரோடு பவுல் எப்படி பணிசெய்தார் என்பதை கவனித்துப் பாருங்கள் 1,2 தீமோத்தேயு, தீத்து ஆகிய புஸ்தகங்களில் நன்றாக படித்துப் பாருங்கள்.

**கர்த்தர் உன்னை ஆசீர்வதித்திருக்கிறாரா...**

வாழ்க்கையிலே, உணவிலே, உடல்நலத்திலே, ஆறுதலிலே,
உன் விண்ணப்பத்திற்குப் பதிலளித்தலிலே மேலும்
ஆயிரக்கணக்கான வழிகளிலே கடந்த வாரத்தில்?
அவருடைய கட்டளைக்குக் கவனம் செலுத்தி
"பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தம் செய்ய" (மத்.7:2)
உன்னாலான மட்டும் நலமானதைச் செய்வதின் மூலம்
"உமக்கு நன்றி, கர்த்தாவே" என்று நீ சொல்லாமே.
பலனோ மிகப்பெரிய ஆசீர்வாதம்! - TVOTI

# ஆசிரியர் என்பவர் யார்?
# What is a Teacher?



1. ஆசிரியர் என்பவர் மற்றவர்களின் எல்லையற்ற தன்மையை நிர்ணயிப்பவர்.
2. ஆசிரியர் என்பவர் மற்றொன்றை கற்க உதவுபவர்.
3. ஆசிரியர் என்பவர் அறிவை பகிர்ந்தளிப்பவர்.
4. ஆசிரியர் என்பவர் அவனுடைய தேவைக்கு இன்னொரு பலனை அறியச் செய்கிறவர்.
5. ஆசிரியர் என்பவர் மற்றவர்களை சரிசெய்கிறவர்.
6. ஆசிரியர் என்பவர் கற்பித்தல் / கற்றல் ஒழுங்குகளுக்கு செய்முறை, அமைப்பு அல்லது படக்காட்சி மூலம் புகட்டப்படும் கல்வியை விட மிகவும் முக்கியமானவர்.
7. ஆசிரியர் என்பவர் நேர்மையானவற்றின் உற்பத்தி பொருளாவார்.
8. ஆசிரியர் என்பவர் திறமையிலிருந்து திறமைகளை வெளிக்கொண்டுவரும் திறமையுள்ளவர்.
9. ஆசிரியர் என்பவர் பாடத்திட்டத்தின் 90சதவிதம் ஆவார்.
10. ஆசிரியர் என்பவர் ஆத்துமாக்களை வடிவமைப்பவர்.
11. ஆசிரியர் என்பவர் பூமியில் தேவனுடைய ஸ்தானாபதியாயிருப்பவர் (2கொரிந்தியர்5:20).

### வேத அறிவுப்போட்டி எண் 90-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| Mrs. மரகதம் திரவியம் | -கோம்பை |
| M.புகழரசு | -குடியாத்தம் |
| S. தண்டபாணி | -சிலுவத்தூர் |
| Mrs. மெல்ஸிடா | -திண்டுக்கல் |
| Mrs. இம்மானுவேல் | -கடலூர் |
| D. யேசுதாஸ் | -சித்தூர் |
| R. பால்சாமுவேல் | -பிடாரியூர் |
| G.P. ஏசையன் | -கோபி |
| S. பாக்கியராஜ் | -திண்டுக்கல் |
| P. அலிஸ்மேரியம்மாள் | -வதிலை |
| R. அருண்குமார் | -பிடாரியூர் |
| V.கோவலன் | -மதுரை |
| S.சசிகுமார் | -மணலி |
| G.பூங்கோதை | -வெ. பாளையம் |
| IRA. எதிராசன் | -சங்கரி |
| J.நிர்மலாஜான் | -மதுரை |

### வேத அறிவுப்போட்டி எண் 90-ன் விடைகள்

| | |
|---|---|
| 1.கில்கால் | -யோசு.5:9 |
| 2.தீமோத்தேயு,பவுல் | -2தீமோ.1:14 |
| 3.கிதியோன் | -நியா.6:14 |
| 4.மறுதலிக்கிறார்கள் | -தீத்து1:16 |
| 5.நகோமி | -ரூத்1:7 |
| 6.ஒநேசிமு | -பிலே.11 |
| 7.தாவீதோடே | -1சாமு.22:2 |
| 8.எபிரெயர் | -எபி.10:28 |
| 9.ஈதாய் | -2சாமு.15:21 |
| 10.அழிக்கவும் | -யாக்.4:12 |


A.ஜோதிகாந்தம் - போடப்பாறை
G.கிரேஸ்லிடியா - வெள்ளகுளம்
N.கமலவேணி - சென்னை

வேதமே வெளிச்சம்

பெண்கள் பகுதி

# நன்றியுள்ளவளாயிரு
# Be Ye Thankful

- Betty



ஒருவரும் நன்றியற்ற தன்மையை புகழ்வதில்லை. வேதவாக்கியங்களும், தேவனும் கூட நாம் நன்றியுள்ள மக்களாக இருக்க தேவன் விரும்புகிறார் என சுட்டிக்காட்டுகிறது. உண்மையில் அவர் நமக்கு செய்திருக்கிற எல்லாவற்றிற்காகவும் நமது நன்றியினை அவரிடம் வெளிப்படுத்த நமக்குக் கட்டளையிடுகிறார். சில வசனங்களை நாம் வாசிப்போம்.

"தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது" *(2கொரி.4:15)*.

"இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர், தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்" *(2கொரி.9:12)*.

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" *(பிலி.4:6)*.

*2கொரி.4:15* தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும் எனக் கூறுகிறது. எவ்வாறு நன்றியறிதலானது தேவனுடைய கிருபையின் பெருக்கத்தோடு இணைக்கப்பட்டுள்ளது?

*2கொரி.9:12* தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே பரிசுத்தவான்களின் குறைவுகளை நீக்குவதற்கு சம்பூரண பலனுள்ளதாக இருக்கிறது எனக் கூறுகிறது.

*பிலிப்பியர்6:4* தேவனிடத்திற்கு தெரியப்படுத்துகிற நமது ஜெபங்களுக்கும் விண்ணப்பங்களுக்குமிடையே இருக்கிறது ஸ்தோத்திரம் எனக்கூறுகிறது.

ஏன் தேவன் மிகக் குறிப்பாக ஸ்தோத்திரம் செய்தலை ஊக்கப்படுத்துகிறார்? மேலும் அந்த செயல்பாடானது எவ்வாறாக அவர் நம்மிடம் காண்பிக்கிற கிருபையின் பெருக்கத்தை உண்டாக்குகிறது?

நமது இதயம் கெட்ட குழந்தைகளைப் போல தேவன் ஏற்கனவே செய்து முடித்திருக்கிறவற்றிற்கு ஒரு போதும் நன்றி கூறாமல்

மேலும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தால் நாம் தேவனைப் பிரியப்படுத்தமுடியாது. ஆனால் உமக்கு நன்றி என்று கூறுவதற்கு மேலாக தேவன் பன்மடங்கு அதிகமாக செயல்படுகிறார் என நான் நினைக்கிறேன்.

எத்தனை முறை சிலவற்றிற்காக நாம் ஜெபித்து அதைப் பெற்றுக்கொண்டு அதன் பின் முதல் ஜெபத்திற்கு பதில் கிடைக்கப்பெற்றதை நாம் மறந்து மீண்டும் வேறொரு காரியத்திற்காக ஜெபிப்பதில் ஆர்வமுள்ளவர்களாய் இருந்திருக்கிறோம். நீங்கள் சாலைப் பிரயாணப் பாதுகாப்பிற்காக பிரயாணத்தை ஜெபத்துடன் ஆரம்பித்து அதன்பின் உங்களுடைய உரிய இடத்தை நீங்கள் அடைந்தபோது பாதுகாப்பாக நீங்கள் போய் சேர்ந்து விட்டீர்கள் என்பதை நினைப்பதற்கு எப்போதாவது தவறியிருக்கிறீர்களா? அடிக்கடி நாம் ஒரு தேவைக்காக ஜெபித்துவிட்டு, மற்றொன்றிற்குக் கடந்து செல்கின்றோமே தவிர, பதிலளிக்கப்பட்ட ஜெபத்தை எண்ணிப்பார்க்காமல் தொடர்ந்து கேட்டு, கேட்டு தேவன் நமது ஜெபங்களை எப்போதும் கேட்டுக்கொண்டே யிருக்கிறார் என்பது பற்றி நாம் நமக்குள்ளே சந்தேகம் கொள்கிறோம்.

நாம் நிறுத்தி நிதானமாக விண்ணப்பித்துள்ள குறிப்பிட்ட விண்ணப்பங்களில், நாம் பெற்றுள்ள குறிப்பிட்ட பதில்களை எண்ணிப்பார்த்து அதன்பின் கிடைத்த பதில்கள் ஒவ்வொன்றிற்காக வார்த்தைகளில் நன்றி கூறுதலோடு அடுத்த விண்ணப்பங்களை முன்வைப்போமானால் நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்துவதில் அது எப்பேர்பட்ட ஔஷதமாயிருக்கும்!

முந்தையநாட்களில் உதவினதும் பராமரித்ததுமான உண்மையான ஒவ்வொன்றையும் நன்றிகூறுதலில் பட்டியலிடுவோமென்றால், நம்மை பாதுகாக்கின்ற தேவனில் மகா பெரிதான விசுவாசத்தையும், தேவையான வழிநடத்துதலையும் அவர் கொடுப்பார் என மகா பெரிதான நம்பிக்கையையும், அவருடைய அநாதி அன்பின் மேல் பெரியதான உறுதியையும் பெற்றிருக்க மாட்டோமா?

அவ்வாறே நேற்று அன்புகூர்ந்து, நமக்கு செவிகொடுத்த தேவன் இன்றும் கூட நேசித்து நமக்குச் செவிகொடுப்பார் என்ற மிகுந்த உறுதியோடு மகாபெரிய விசுவாசத்தில் நாம் ஜெபிப்போம். நாம் 1யோவா.5:14,15-ல் யோவான் வெளிப்படுத்தியதை அறிந்து கொள்வோம். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். யோவான் ஜெபித்தபோதே ஏற்கனவே தன்னுடைய கையில் பதிலை அவன் பெற்றிருந்தது போல அவனுடைய நம்பிக்கை

மிகப் பெரியதாயிருந்தது. "நாம் பெற்றுக்கொண்டோமென்று நாம் அறிந்திருக்கிறோம்...." முந்தைய பதில்களுக்கு நன்றியுள்ளவர்களா யிருத்தல், அதே நம்பிக்கையுடன் கூட ஜெபிப்பதற்கு நம்மை பெலப்படுத்துகிறது. வருத்தம் என்னவென்றால், கிறிஸ்தவர்களுடைய பல நல்ல ஜெபங்களுக்குப் பதில் 'இல்லை' என்பதேயாகும். 'இல்லை' என்ற அந்த பதில் தங்களுக்கு தங்களால் கொடுக்கப்பட்டது ஏனென்றால் அவர்கள் ஒருபோதும் பதிலளிக்க தேவனுக்கு வாய்ப்பளிக்கவில்லை.

அது எவ்வாறு இருந்தது? யாக்கோபு1:5-7-ல் கூறுகிறார் "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்: சந்தேகப் படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக".

தேவன் கேட்பாரோ என்ற சந்தேகம், மிகுதியான ஜெபத்தை வீணாக்கியிருக்கிறது. சந்தேகத்தை முறியடிப்பதற்கு நாம் கொண்டிருக்கிற ஒரு ஆயுதமானது, நமது வாழ்க்கையை திரும்பிப்பார்த்து தேவனுடைய முந்தைய நாளின் பராமரிப்பையும் ஜெபங்களுக்கான பதில்களையும் எண்ணிப்பார்ப்பதுமே ஆகும். நாம் நிறுத்தி நிதானித்து அதன்பின் நமது குற்றங்களை வார்த்தையினால் அறிக்கையிட்டு நமது வாழ்வில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளும் உண்மையாகவே தேவனுடைய செயல் (யதார்தமாக நிகழும் அல்லது நடைபெறும் ஒன்று அல்ல) என்றும், அவருக்கு நன்றி செலுத்துவதன் மூலம் அவருடைய கவனமுள்ள பராமரிப்புக்கு நாம் காணிக்கை செலுத்துகையில் அச்செயலே அவர் இன்னும் செவிகொடுக்கிறார் என்றும், நமக்கு உதவும்படி காத்திருப்பார் என்றும் எண்ணும்படி நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்துகிறது.

எனவே நன்றியுடனிருப்பது போதுமான விசுவாசத்தைப் பெற்றிருப்பதற்கு நம்மை பெலப்படுத்துகிறது. மறுபுறம் நம்முடைய வாழ்வில் நமது நன்மைக்கென்று செயல்பட தேவனை தடையின்றி அனுமதிக்கவும் செய்கிறது. அவருடைய உதவிக்காகவும், அவருடைய சுயவிருப்பங்கள் நமக்கு உதவும்படிக்கு எல்லாவற்றையும் சாதகமாக்கவும் அவருடைய கட்டளைகள் நமது வாஞ்சைகளை எவ்வளவு அழகாய் இணைக்கின்றது!

"தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்" நீதி.30:5.

# மோசேயின் காலம் கி.மு. மற்றும் கிறிஸ்துவின் காலம்

A.S.Madhivanan

**உங்களின் சிந்தனைக்கு**

கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் கோடிக்கணக்கான மக்கள் கிறிஸ்மஸ் என்ற பண்டிகையை கொண்டாடுகின்றனர். ஆனால், நாம் வேத புத்தகத்தில் எங்கு தேடிப் பார்த்தாலும் அப்படியொரு பண்டிகை கொண்டாடியதை பார்க்கமுடியாது.

அதைப்போல, புத்தாண்டு தினத்தைக் கொண்டாடலாமா? புத்தாண்டு தினமாகிய New Year, கிறிஸ்தவர்கள் கொண்டாடினார்கள் என்ற சான்று புதிய ஏற்பாட்டில் எங்கும் இல்லை. அப்படியிருந்தும் உலகத்தில் உள்ள ஏறக்குறைய அனைத்து மக்களும் ஒரு சிலரைத் தவிர இந்நாளைக் கொண்டாடுகிறார்களே! அது எப்படி? பிரியமானவர்களே, நாம் வேதத்தை படிக்கும்போது, பிதாக்களின் காலம், மோசேயின் காலம் அல்லது தீர்க்கதரிசிகளின் காலம் என்று பகுத்துப்படிப்பதைப்போல இந்த புத்தாண்டு தினத்தைக் கூட கிறிஸ்துவுக்கு முன்னான காலம், கிறிஸ்துவுக்குப் பின்னான காலம் என்று வேதத்தின் மூலமாக பகுத்து ஆராய்ந்து பார்க்கலாமே!

கிறிஸ்து மானிடராய் இந்த உலகத்தில் பிறப்பதற்கு முன்பாக இஸ்ரவேல் ஜனங்கள் சீலோவிலே வருஷந்தோறும் கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடினார்கள். (நியாயாதிபதி 21:19) என்றும், அன்னாளின் கணவன் எல்கானா சீலோவிலே சேனைகளின் கர்த்தரை பணிந்து கொள்ளவும் அவருக்கு பலியிடவும் வருஷந்தோறும் தன் ஊரிலிருந்து போய் வருவான் (1சாமுவேல் 1:1-3) என்றும் 1:21-ல் தன் வீட்டார் அனைவரோடுங்கூட போனான் என்றும் எழுதப்பட்டுள்ளதை நாம் பார்க்கலாம்.

மேலும் யாத்திராகமம் 34:22-ல் வருஷ முடிவிலே சேர்ப்புக்கால பண்டிகையை ஆசாரிப்பாயாக என்றும் உள்ளது. இது இஸ்ரவேல் மக்களுக்கு சொல்லப்பட்டு இருந்தாலும் அவர்கள் வருஷத்தை கொண்டாடினார்கள் என்பதை நினைவுபடுத்தவே இதை நாம் பார்க்க வேண்டியுள்ளது. மேலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பு வாழ்ந்த தீர்க்கதரிசியாகிய தாவீது சங்கீதம் 65:11-ல் வருஷத்தை உம்முடைய நன்மையால் முடி சூட்டுகிறீர் என்று எழுதியுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

ஆம், பிரியமானவர்களே, தேவன் ஒவ்வொரு ஆண்டையும் அவருடைய நன்மையால் முடி சூட்டுகிறார் என்பதை நாம் ஒப்புக் கொண்டு அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ரோமானிய அரசர் சீசர் கி.மு. 46-ல் ஜனவரி 1-ம் தேதியை வருடப்பிறப்பாக சட்டப்படி அறிவித்தார் என்று சரித்திர சான்று உள்ளது.

சரி, இந்த வருஷங்கள் யாரால் உண்டாக்கப்பட்டது என்பதற்கான வேத ஆதாரங்கள் சிலவற்றைப் பார்க்கலாம். ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரம் 14முதல் 18 வரை வாசிக்கும்போது தேவன் பகலுக்கும், இரவுக்கும் வித்தியாசம் உண்டாக்கத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக் கடவது. அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிப்பதாகவும் இருக்கக்கடவது என்றார்.

ஆகவே, தேவனால் உண்டாக்கப்பட்ட காலங்களாகிய வருஷத்தின் துவக்கமும் முடிவும் தெரியாவிட்டால் மனிதனின் வாழ்நாட்கள் எவ்வளவு என்கிறதான கணக்கும் தெரியாமல் போயிருக்கும். உதாரணமாக ஆறறிவுள்ள மனிதனைத் தவிர வேறு எதற்கும் தன்னுடைய வயது தெரியாது. நம்முடைய முற்பிதாக்கள் எத்தனை வருஷங்கள் வாழ்ந்தார்கள் என்கிற கணக்கு ஆதியாகமம் 5:1-32, 7:6; 11:10-32 ஆகிய வசனங்களை வாசிக்கும்போது தெரியும். ஆகவே, நம்முடைய பிறந்த நாளை வைத்துத்தான் நாம் இத்தனை வருஷங்கள் தேவனின் கிருபையில் வாழ்ந்தோம் என்று சொல்ல முடியும்.

சரி, இப்போது நாம் இயேசுவின் காலத்தில் வருஷங்களைப் பற்றி என்ன சொல்லப்பட்டுள்ளது என்று பார்க்கலாம்.

லூக்கா2:42-ல் அவருக்கு (இயேசுவுக்கு) பன்னிரெண்டு வயதானபோது அவர்கள் அந்த பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப் போய் என்றும் லூக்கா3:23-ல் இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார் என்றும் எழுதப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். மேலும், லூக்கா8;43-ல் இயேசு 12 வருஷம் பெரும்பாடுள்ள ஸ்திரீயை குணப்படுத்தியதையும் லூக்கா13:11-16-ல் 18 வருடமாக பெலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஸ்திரீயை இயேசு குணமாக்கினார் என்றும் யோவான்5:5-ல் 38 வருஷமாக வியாதி கொண்டிருந்த மனுஷனை இயேசு குணமாக்கினார் என்று பார்க்கிறோம்.. இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் வருஷத்தை கணக்கிட்டால் மட்டுமே, தேவன் வருஷத்தை அவருடைய நன்மையால் முடி சூட்ட சித்தமுள்ளவராய் உள்ளார் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.


மேலும், லூக்கா4:16-20 வரை வாசிக்கும்போது ஏசாயாவின் புத்தகத்தில் உள்ள கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தை பிரசித்துப்படுத்தவும் என்னை அனுப்பினார் என்று எழுதி இருக்கிற இடத்தை இயேசு கண்டு வாசித்து அமர்ந்தார் என்று பார்க்கிறோம் எனவே, கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தை பிரசித்தப்படுத்த புத்தாண்டை நாம் ஏன் பயன்படுத்தக்கூடாது?

# தேவை! தேவை!! தேவை!!!

கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.தொடர்புக்கு : 94435 58041

செங்கல்பட்டில் ஊழியம் செய்ய 30 வயதுக்கு மேல் உள்ள திருமணமான கிறிஸ்துவின் சபை ஊழியர் தேவை. அணுகவேண்டிய தொலைபேசி எண்: 9994454724 / 9962011188. சகோ. பலராமா மற்றும் சகோ.லூயிஸ்.

"ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்" யோவான்12:26.



## மணமகள் தேவை:

1. 30 வயதுள்ள M.A. படித்த போதகர், புது டில்லி தொடர்பு பிரான்ஸிஸ் டேவிட் 9810763321.
2. 30 வயதுள்ள +2 படித்த தனியாரில் பணிபுரியும் கிறிஸ்துவுக்குள் உள்ள மணமகனுக்கு. தொலைபேசி: 9884831688. சகோ. சுந்தர்ராஜ்.
3. 38 வயது HSC. படித்த மஹாராஷ்ட்ரிய கிறிஸ்தவ மணமகனுக்கு தொலைபேசி எண்: 09869194251 / 022-66965070 / 66.

மேற்கண்ட தகவலுக்கு பத்திரிக்கையாளரை தொடர்பு கொள்ளவேண்டாம். கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். தேவைப்பட்டால் மேலும் தொடர்புக்கு S.David Martin 98404 25080.

## மணமகன் தேவை:

1. 31 வயது பெங்களூரில் வேலை. தொலைபேசி: 9986435098 / 080-25341414. சகோ. லெஸ்லி லாரன்ஸ்.
2. 24 வயது மணமகள். தொலைபேசி: 9884831688. சகோ. சுந்தராஜ் ஊழியர் சென்னை.
3. 22 வயது மணமகள். தொலைபேசி: 9443560282. சகோ. மத்தாயி.
4. 34 வயது மணமகள். தொலைபேசி: 9884464924. சகோ. மனுவேல் சென்னை .
5. 25 வயது B.Com., மணமகள். தனியார் வேலை தொலைபேசி: 924455382. சகோ. செங்கோல்ராயன் ஊழியர் பாண்டிச்சேரி.
6. 31 வயது மணமகள். தொலைபேசி: 98402 65751.சகோ. எழிலன் சூளை ஊழியர் சென்னை .



# துணையில்லா இடங்கள்
# *The Lonely Places*

எனது மனதின் துணையில்லா இடங்களில்
நடக்கிறேன் நான் உம்மோடு
இருண்டுபோன சாலைகளிலும்
அமைதியான நீரோடை அருகிலும்
விண்மீன்கள் மறைந்திருக்கிற
இருள் சூழ்ந்துகொண்ட ஆகாயங்களின் கீழும்.


நடக்கிறேன் நான் உம்மோடு
துணையில்லா கும்பல்களிலும்
சுழன்றடிக்கின்ற உறைபனி பொழியுமிடத்திலும்
மனதை வாட்டுகின்ற இரவின் சப்தங்களினிடத்திலும்
வெறுமையான காற்று நிரம்பி
வளைந்துபோன மரங்களினிடத்திலும்
காற்று மற்றும் மழையின் அடியிலும்;

நடக்கிறேன் நாம் உம்மோடு
சமாதானத்தை அனுபவித்து
இல்லாமையில், உள்ளே:
நான் உணருகிறேன் உமது அன்பை
மேலும், கேட்கிறேன் சாந்தமுள்ள பாடலின் இனிய தாளமான
உமது குமாரலை
சகோதரத்துவத்தில்,
மதிப்புமிகுந்த, எனக்குப் பிரியமான
அழகின், ஆற்றலின் மனோ வார்த்தைகளில்
என் ஆத்துமாவை தாங்கும் எண்ணங்கள்
என் மனதின் துணையில்லா இடங்களை நிரப்பும்.

**- Betty**

# பாடுபடும் கிறிஸ்தவர்கள்

*P.R.Swamy*



எபிரேயருக்கு எழுதின ஆசிரியர் எபி.12:4-ல் "பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப் படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே" என்கிறார். விசுவாச வீரர்கள் தங்கள் விசுவாசத்திற்காக எப்படி தங்கள் பிராணனை ஒப்பு கொடுத்தார்களோ, அப்படியே கிறிஸ்துவும் பாவிகளுக்காக தன் ரத்தத்தை சிந்தினார். எபிரெய கிறிஸ்தவர்கள் சகிக்க முடியாத தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருப்பார்கள். இருப்பினும், ஒருவேளை மரணத்தோடு போராடியிருக்க மாட்டார்கள். கிறிஸ்தவர்களுக்கு எதிராக, எருசலேமிலும், தமஸ்குவிலும் மற்ற அனேக இடங்களிலும் கொடுமையும், வன்முறை செயல்களும் ஆரம்பமாயின. அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கு நேர்ந்த துன்பங்களை,கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம் 11-ம் அதிகாரத்தில் தெளிவாக விளக்குகின்றார். அப்போதைய நிலையில் எபிரெய கிறிஸ்தவர்கள் என்ன துன்பப்பட்டார்களோ, இதை கிறிஸ்துவும் மற்றவர்களும் பட்ட துன்பத்துடன் ஒப்பிடமுடியாது. இருப்பினும் பாவத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்கும் பொழுது, துன்பங்கள் வந்திருக்கும். "அன்றியும் என் மகனே கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே" என்றார் (வசனம்-5). கிறிஸ்தவ ஜீவியத்தை துவக்கிய அநேகர், பாதியிலே நின்றுவிடுகின்றனர். ஆரம்பம் நன்றாக இருந்தாலும், வழியிலே பெலனற்று ஒடிந்து விடுகின்றனர். ஓட்டம் முடிவு வரை செல்லுவதில்லை.

ஒரு நல்ல தகப்பன் தன் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பில், அதுவும் சரியான பாதைகளில் நடத்தி செல்லும் பணியில், அவர்களை சிட்சிக்காமல் இருக்க மாட்டான். குமாரர்கள் குடும்ப வாரிசு. குடும்பத்தின் கௌரவும் அவர்கள் நடத்தையைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, தன் குமாரன் மீது அன்பு வைத்திருக்கும் எந்த தகப்பனும் அவனை சீர்திருத்தாமல் விடமாட்டான், ஆகவே, 'சிட்சை' அவசியம். நாகரீக மோகத்தில் சென்று கொண்டிருக்கும் இந்த உலகத்தில், இதைப்பற்றி கவலைப்படுபவர்கள் யாரும் இல்லை ஏதோ பெற்ற கடமைக்கு உணவு, உடை, மீறினால் படிப்பு இவற்றை கொடுத்து விட்டு, காலா காலத்தில் ஒரு கலியாணத்தை பண்ணி அவர்களை எங்கேயாவது ஓட்டி விட்டால் போதும் என்று எண்ணுகின்றனர், தற்போதைய

தகப்பன்மார்கள். தங்கள் பிள்ளைகளை சிட்சித்து சீர்திருத்தி வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதில்லை. பிள்ளைகளும் பெற்றோருக்கு கீழ்படியாமல், முரட்டாட்டம் செய்கின்றவர்களாகவே இருக்கின்றனர். தன் பிள்ளைகளை, நல்லொழுக்கத்தில் கொண்டு வர, அவர்களை சிட்சியாத தகப்பன் அவர்கள் மீது அன்பு செலுத்தவில்லை என்றுதான் பொருள்.

எபிரேய ஆசிரியர் கிறிஸ்தவர்கள் தேவனுடைய புத்திரர் என்கிறார். தேவன் அவர்களை சிட்சிக்கிறார் என்கிறார். அதையே சாலமோனும், "என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவர் கடிந்து கொள்ளும்போது சோர்ந்து போகாதே தகப்பன் தான் நேசிக்கிற புத்திரர்களை சிட்சிக்கிறது போல, கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார் என்றார். தேவனுடைய புத்திரர் என்னப்படுவது உலகில் யாருக்கும் கிடைக்காத அற்புதமான சிலாக்கியம். பொறுப்போடு பிள்ளைகளை சிட்சிப்பதில் வரும் சந்தோஷத்தை சுட்டிகாட்டும் போது ஞானி சாலமோன், "உன் மகனை சிட்சை செய், அவன் உனக்கு ஆறுதல் செய்வான். உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்" என்றார்.

எந்த சிட்சையும், தற்காலத்தில் சந்தோஷமாயிருக்காது. ஆனால் ஏற்ற காலத்தில் அது பலனை கொடுக்கும். வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ளும் முதல் பாடம், எந்த காரியத்தை செய்தாலும் நாம் இன்று அனுபவிக்கும் சந்தோஷம், ஆரம்பகாலத்தில் நாம் பட்ட கஷ்டங்களும், தியாகங்களின் பிரதிபலன் தானே.

தேவனுடைய படைப்பிலே அதிக உஷ்ணமும் கேடு விளைவிக்கிறது அதிக குளிரும் உடம்பை பாதிக்கிறது. இருள் இல்லாத ஜீவியத்தை எதிர்பார்க்கமுடியாது, வெளிச்சமும், இருளும் மாறி மாறி வருகிறதே! பகல் இரவைப்போல, துன்பமும், இன்பமும் மாறி மாறி வருவதும் இயற்கையே. எபிரேய ஆசிரியர், "கர்த்தர் தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" என்கிறார். கிறிஸ்தவனுடைய வாழ்க்கைபாதை மென்மையான ரோஜாப்பூ இதழ்களால் ஆனதல்ல. சில சமயம் கரடு முரடான பாதையில் செல்ல வேண்டிவரும். உலக பிரகாரமான எத்தனையோ சாதனைகளில் இந்த உண்மையை உணர்ந்து, பல பாடுபட்டு, சிட்சிக்கப்பட்டு முடிவில் தங்கள் குறிக்கோளை அடைகின்றார்கள். பரலோக பாதையை மாத்திரம், கண் இமைக்கும் நேரத்தில் எந்தவித முயற்சி இல்லாமல், சிட்சையையும் சகிக்காமல் எளிதில் கடந்து விடமுடியுமா? "பிரம்பை கையாடாதவன் தன் மகனை பகைக்கிறான்" என்றார் ஞானி. மேலும் பிள்ளையை தண்டியாமல் விடாதே, அவனை பிரம்பினால் அடித்தால் அவன் சாகான் என்றார். (அதற்காக சாகும் வரை அடித்து கொண்டு இருக்க மாட்டீர்கள் அல்லவா!) மேலும் நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவை தப்புவிப்பாயே என்கிறார்.

நவீன உலகத்தில் ஜீவிக்கும் நமக்கு இந்த புத்திமதிகள் பொருந்தாததைப் போல தோற்றமளிக்கும் அல்லவா? சிட்சையின் மூலமாகத்தான் தேவன் அவர்களை புத்திரராக எண்ணி நடத்துகிறார் என்கிறார். எபிரேய ஆசிரியர். மேலும், சரீர தகப்பன்மார்கள் நம்மை சிட்சிக்கும்போது, அவர்களுக்கு அஞ்சி நடக்கிறோம் அல்லவா, தேவனுக்கு எவ்வளவு அதிகமாக அஞ்சி நடக்க வேண்டும் என்கிறார்.

அந்த சிட்சை, தற்காலத்தில் சந்தோஷமாய்காணாது ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய பலனைத்தரும் என்று வலியுறுத்துகிறார், இதைத்தான், கிறிஸ்துவும் "நீதியின் நிமித்தமாய் துன்பப்பட்டால் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களா யிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் என்றார்.

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்றார் பவுல்.

ஆனால் நாமே துன்பத்தை உருவாக்கிக்கொள்வதில் நன்மை இல்லை. "தீமை செய்து பாடநுபவிப்பதிலும் தேவனுக்குச் சித்தமானால் நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும் என்றார் பேதுரு. மேலும் ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனா யிருக்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன் என்றார் பேதுரு. கிறிஸ்து நமக்காக பாடுபட்டதினால் நமக்காக ஒரு மாதிரியை வைத்து விட்டு போயிருக்கிறார். ஆகவே பேதுரு


கொடைக்கானலில் குதூகலம்

2nd Preacher's Family Fellowship Meeting

2வது பிரசங்கியார் குடும்ப ஐக்கிய கூட்டம்

நாள்: 7,8,9 மே மாதம் 2008

இடம்: கொடைக்கானல் ஆசிரமம்.





"எழுந்து கட்டுவோம் வாருங்கள்"

தொடர்புக்கு: 94435 58041

The Word of Christ

P.O.Box 5, Batlagundu - 624 202, S.INDIA.

கூறியபடி கிறிஸ்து நமக்காக பாடுபட்டபடியால், நாமும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாக தரித்துக்கொள்ளவேண்டும்.

தேவனுடைய திருவாசகங்கள் இதற்காகதான் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மை கண்டித்து உணர்த்தி, சீர்திருத்தி செம்மையான வழியில் நடத்த, பவுல் "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்கிறார்.

வானொலி நேயர்கள் எனக்கு கடிதம் எழுதும்போது, ஏதோ ஒரு பிரச்சனையை சுட்டிக் காட்டாமல் எழுதுவதில்லை. ஆம்! பிரச்சனைக்கு மத்தியில் தான் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். எல்லா பிரச்சனைகளையும், சுலபமாக தீர்க்கும் அற்புத மருந்து என்னிடம் இல்லை. இருந்தால் அதை மக்களுக்கு வழங்கி நான் உலகத்திலேயே ஒரு பெரிய கோடீசுவரனாக மாறி இருப்பேன். எல்லாப் பிரச்சனைகளும் அற்புதமாக, கை குட்டையையோ, ரேடியோவையோ தொட்ட மாத்திரத்தில், மறைந்து விடும் என்று சொல்லி மக்களை ஏமாற்ற விரும்பவில்லை.

உங்கள் பாடு, வியாகுலம், துன்பத்தின் ஆழத்தை நான் அறியேன். ஆனால் கிறிஸ்து அறிந்திருக்கிறார். அவர் அடிச்சுவற்றை பின் பற்றுகிறவர்களுக்கும் அத்துணைபாடுவரும். அவரே (தேவக்குமாரனே) இவ்வுலகில் பாடுபடவில்லையா? அவருடைய சீடர்கள் என்று கூறிக்கொண்டு, அவர் நிமித்தம் பாடுபடும் போதோ நீதியினிமித்தம் துன்பப்படும் போதோ, ஏன் முணுமுணுக்கவேண்டும். அது ஒன்றும் நமக்கு பாக்கியமில்லையா? பிரச்சனை எதுவென்றால், சரீர பிரகாரமான காரியங்களை, இவ்வுலக பாடுகளையே எண்ணிக் கொண்டிருப் பவர்களுக்கு அப்படித்தான் இருக்கும். அவர்கள் தான் ஒரே நிமிடத்தில் நிலைமையை மாற்றிவிடும் அற்புதங்களை செய்பவர்கள் என்று கூறிக் கொள்பவர்களிடத்தில் செல்வார்கள்.


கிறிஸ்துவுக்குள்ளான ஆசீர்வாதங்களில், நித்திய வாழ்வு அது மறுமையில், இம்மையில் பரிபூரண ஜீவன், அது என்ன? பாடுகளுக்கு மத்தியிலும், தேவ சமாதானத்தோடு, பரத்தை பற்றிக்கொண்டு, உலகத்தை சமாளிக்கும் திறன்.

நீ கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதினால், அவருடைய சரீரமாகிய சபையில் இருந்து எல்லா ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரனாகலாம். ஒன்று சொல்வோம், அவரோடு பாடு அனுபவிக்க விருப்பமா? தேவனிடத்தில் வா? உங்கள் ஒவ்வொருவருக்காகவும் ஜெபிக்கிறோம்.

## லூக்கா சுவிசேஷ புத்தகத்தின் சிறப்பு அம்சங்கள்

**மற்ற சுவிசேஷ புத்தகத்தில் குறிப்பிடாததும் இவரால் மட்டுமே குறிப்பிடப்பட்டதுமான விசேஷங்கள்**

1) யோவான் ஸ்நானனின் பிறப்பு – லூக்.1:5–25
2) மரியாளுக்கு வாக்குத்தத்தம் – லூக்.1:26–38
3) மேய்ப்பர்களுக்கு சொல்லப்பட்ட அறிவிப்பு – லூக்.2:8–20
4) இயேசு விருத்தசேதனம் பண்ணப்பட்டார் – லூக்.2:21
5) இயேசுவை தேவாலயத்திற்கு கொண்டுபோகுதல் – லூக்.2:–39
6) இயேசு 12–ம் வயதில் எருசலேமுக்குப் போகுதல் – லூக்.2:42–50
7) நாசரேத்தில் இயேசுகிறிஸ்து செய்த பிரசங்கம் – லூக்.4:16–30
8) பேதுருவின் விசேஷமான அழைப்பு – லூக்.5:8–10



**மற்றவர்கள் குறிப்பிடாத 6 அற்புதங்கள்**

1) திரளான மீன்கள் – லூக்.5:1–7
2) மரித்த வாலிபன் – லூக்.7:11–17
3) 18 வருட கூனியானஸ்திரீ – லூக்.13:10–17
4) நீர்கோவை வியாதியஸ்தன் ஓய்வு நாளில் சுகமாகுதல் – லூக்.14:1–6
5) 10 குஷ்டரோகிகள் சுகமாகுதல் – லூக்.17:11–19
6) வெட்டப்பட்ட மல்குஸ் காது சொஸ்தமாகுதல் – லூக்.22:49–51

**மற்றவர்கள் குறிப்பிடாத உவமைகள், நிகழ்ச்சிகள்**

1) நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் – லூக்.7:1–11
2) கடன்பட்டிருந்த இரண்டுபேரை மன்னித்தல் – லூக்.7:41–43
3) நல்ல சமாரியன் – லூக்.10:30–37
4) ஜெபம் பண்ணவேண்டிய அவசியம் – லூக்.11:5–8
5) பொருளாசைக் குறித்து எச்சரிக்கை – லூக்.12:13–21
6) கனிகொடாத அத்திமரம் – லூக்13:6–9
7) பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே – லூக்14:7–11
8) அசட்டை செய்தல் – லூக்.14:15–24
9) காணாமற்போன ஆடு – லூக்.15:1–7
10) காணாற்போன வெள்ளிக்காசு – லூக்.15:8–10
11) மனந்திரும்பிய மகன் – லூக்.15:11–32
12) அநீதியான உக்கிராணக்காரன் – லூக்.16:1–13
13) லாசரும், ஐசுவரியவானும் – லூக்.16:19–31
14) ஆதாயமில்லாத ஊழியக்காரன் – லூக்.17:1–10
15) சோர்ந்து போகாமல் ஜெபம் செய்தல் – லூக்.18:1–8
16) இரண்டுபேர் செய்த ஜெபம் – லூக்.18:9–14

*-திறவுகோல் மாதஇதழ் புத்தகத்திலிருந்து*
*ஆசிரியர்: செங்கோல்ராயன், பாண்டிச்சேரி*

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -7

### ( கடைசி தீர்க்கதரிசி யோவான்ஸ்நானன், தீர்க்கதரிசிகளில் மிகவும் பெரியவர் ) - இயேசுகிறிஸ்து

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378



தேவனிடத்தில் நன்றியுள்ளவர்களாயும், பிரியமுள்ளவர்களாயும் இருக்கவேண்டிய மனிதஇனம், அவ்வாறாக இல்லாமலும், கீழ்ப்படியாமலும், அவரை மறுதலித்து, எதிர்த்து, மறந்து அவரைவிட்டு வெகுதூரமாய் சென்று விட்டனர். தன் தவறை உணர்ந்து கொள்ள, அன்பு மாறாத தேவன், மனிதரிடையே பற்பலதீர்க்கதரிசிகளை எழுப்பி, அவர்கள் திரும்பவும் தேவ அன்பை அறிந்துகொள்ள அவர்களுக்கு ஏற்ற நற்செய்திகளை, எச்சரிப்புகளை அறிவிக்க தெரிந்து கொள்ளப்பட்ட தீர்க்கதரிசிகளை அனுப்பி உதவினார். தேவ பிரதிநிதிகளான அவர்கள் வரப்போகிற மேசியாவாகிய உலக இரட்சகரின் பிறப்பு, வளர்ச்சி, ஊழியம், சிலுவைப்பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், கடைசியாக பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகியவைகளை முன்னறிவித்து, பழைய ஏற்பாட்டில் 4000 ஆண்டுகளாக ஆடுமேய்ப்பவன், ஆமோஸ்7:14, உழுபவன், 1இராஜா.19:19 மற்றும் அரசர்கள் ஆதி.23:6 ஆசாரியர்கள் எசேக்.1:3. தீர்க்கதரிசனமாக 330-க்கும் மேற்பட்ட தீர்க்கதரிசனங்களை அறிவித்தனர்.


இவைகளெல்லாம் நிறைவேறப்பட்டன என்பதை சுவிசேஷங்களில் அறிகிறோம். அவர்களில் சிலரை அவர்கள் பிறப்பதற்கு முன்பே தெரிந்துகொண்டார் எரேமி.1:5, லூக்.1:13-18 அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் பரத்திலிருந்து அளிக்கப்பட்டதாகும். யாத்.7:1-2; இவர்களுக்கு தேவன் அழைப்பை தவிரவேறு விசேஷமான தகுதி ஒன்றுமே இல்லை. சிலர் தங்கள் வாழ்நாளெல்லாம் தீர்க்கதரிசனத்தைக் கூறினர். பலர் குறிப்பிட்ட கால அளவில் தீர்க்கதரிசனம் உரைத்தனர் எண்.11:25,26. ஆனால் அவர்களெல்லாம் தேவ ஆவியினால் எண்.11:29 பேசினர். எசேக்.13:2, எரே.23:16 ஆனால் அவர்கள் தங்கள் சொந்த வார்த்தைகளை கூறவில்லை, எடுத்துக்காட்டாக இயேசு கிறிஸ்து தன் வாழ் நாளெல்லாம் தாம் செய்த அற்புத அடையாளங்கள், பேசின அறிவுரைகள் அனைத்துமே பரலோக பிதாவினால் போதிக்கப்பட்டவைகள். யோவா.12:49-50; 14:31; 15:10 தனது இறுதி பேரறிக்கையில் அவைகளை செய்து முடித்தார் என்று யோவா.17:4 கூர்ந்து கவனிக்கவும். 2தீமோ.3:16-ன்படி அவ்வார்த்தைகள் தேவ ஆவியினால் அருளப்பட்டு, தேவமனிதன் தேறினவனாகவும் நற்கிரியை செய்யவும் பயன்பட்டது. எனவே இவர்கள் தேவனின் தூதர்களாவர். ஏசாயா44:26; ஆகாய்1:13 அவர்கள் மேய்ப்பர்களாக சகரியா11.4,7 எரே.17:16, ஜாமக்காரர்களாக காவலாளிகளாக ஏசா.62:6 அறிவிக்கப்பட்டனர். இவர்களில் நோவா, 2பேதுரு2:25. ஆபிரகாம், ஆதி.20:7. ஈசாக்கு, சங்கீதம்105:9,14,15. யாக்கோபு, ஆதி.49. இயேசு கிறிஸ்துவே நற்சான்று அளித்த கடைசி

தீர்க்கதரிசியும், மேன்மையானவனும் பெரியவனுமாகிய யோவான் ஸ்நானன் மத்.11:9-13, மற்றும் மோசே, இவரின் வழிவந்த யோசுவா, உபாக.34:9 யோசுவா1:1,5 சிறுவயதிலேயே ஊழியம் செய்ய ஒப்புக் கொடுக்கப்பட்ட சாமுயேல், 1சாமு.3:19-20. மற்றும் தாவீது இவன் காலத்தில் இருந்த 1. காத், 1சாமு.22:5. 2. நாத்தான், 2சாமு12:1-15. 3. சாதோக், 2சாமு.15:27. 4. ஏமான், 1நாளா.25:5. மற்றும் யெரோபெயாம் காலத்தின் அகியா, 2நாளா.9:29. இத்தோ (IDOO) 2நாளா.13:22; 12:15. யோசியா, 1இராஜா13:1-9; 11:32 மற்றும் எண்ணற்றவர்கள் இவைகளில் ஆதி.49:10-ல் அவரின் கோத்திரம் (TRIBE) பிறப்பிடம் மீகா5:2, அவரின் முன்னோடியானவர். மல்கியா3:1; 4:15; மத்.11:10 அவரின் ஊழியம் ஏசாயா52:13-53:12; சிலுவைபாடு சங்.46:8-11; அப்.2:25-28 பரலோகபிரவேசம் அப்.13:33; அவரின் மேன்மை, மகத்துவம் சங்.110. அப்.2:31. சங்.2; 45 அதி. அவருடைய இராஜ்யம் சங்.72:அதி. சகரியா7:11, 12-14.

சாலீம் ஊருக்குச் சமீபமான, தண்ணீர் மிகுந்திருந்த இடமான அயினோன் என்ற இடத்தில் மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் கொடுத்தவரும் யோவா.3:23. ஏன் இயேசுகிறிஸ்துவிடம் ஞானஸ்நானனைக் குறித்து; அவரிடத்தில் பலகேள்விகள் கேட்ட எருசலேமிலிருந்து அனுப்பப்பட்ட யூதர்கள், ஆசாரியர், லேவியர்களுக்கு கடைசி தீர்க்கதரிசியாகிய ஸ்நானனைப் பற்றிக்கூறும்போது அவர்; மேன்மையானவர், பெரியவர் என்று கூறியதைக் குறித்து சிந்திப்போம் (மத்.11:9-13) இப்படிஇருக்க இன்று சில ஊழியர்கள் நம்மிடையே தங்களை தீர்க்கதரிசிகள் என்றும், அப்போஸ்தலர்கள் என்றும், கூறிக்கொள்வதில் பெருமையடைகிறார்கள். ஆனால் எல்லா சிறப்பினை பெற்ற ஸ்நானன், தான் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியுமல்ல என்றான் யோவா.1:25. இவரின் தாழ்மை, பணிவு எங்கே? நம்மிடையே வாழும் நமது சகோதர்களின் பெருமை என்னவென்பதையும், இன்றைக்கு தீர்க்கதரிசிகள் தேவையில்லை என்பதையும் வேதம் எடுத்து காண்பிக்கிறது. வேதாகமத்திற்கு திரும்புவோம், வேதாகமத்தை மட்டும் நம்புவோம், அதற்கு கீழ்ப்படிவோக!

## ஜெபியுங்கள்

- ☆ சென்ற மாதம் 13–ம்தேதி இந்த பத்திரிக்கை ஆசிரியரின் தாயார் சகோதரி ஒச்சம்மாள் அவர்கள் கர்த்தருக்குள் மரித்துவிட்டார்கள். குடும்ப ஆறுதலுக்காக...
- ☆ சகோதரர் ரஞ்சித் அவர்களுக்கு பிறந்த மகள் 3மணிநேரத்தில் இறந்து விட்டது. ஆறுதலுக்காக...
- ☆ உலக சுவிசேஷகர்களுக்காக ...
- ☆ உலக அமைதிக்காக...
- ☆ ஒவ்வொரு குடும்பங்களும் கர்த்தரை அறிந்துகொள்ள...



## பொது அறிவுக் களஞ்சியம்

### ஆண்டு நிதிநிலை அறிக்கை

ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை பிப்ரவரி மாதம் கடைசி நாள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நம் நாட்டின் நிதி ஆண்டு ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை ஆகும்.

சிறுவர் பகுதி

# மாயமற்ற விசுவாசம்

*வேதபகுதி: 2 தீமோத்தேயு1:1-5*



பிரியமான தம்பி, தங்கைக்கு, பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

நாங்கள் இரவும் பகலும் இடைவிடாமல் எங்கள் ஜெபங்களில் நினைத்து ஜெபிக்கிறோம். உங்களில் இருக்கிற விசுவாசம் மாயமற்றதாயிருக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். விளையும் பயிரை முளையிலே அறியலாம் என்ற முதுமொழிக்கு இணங்க சிறு பிள்ளைகளாகிய உங்களை உலகம் தன் கண்களால் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகின்றது. ஆகையால் பவுல் தீமோத்தேயுக்கு கொடுத்த ஆலோசனையையே உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். "உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்தமனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயத்திருக்கிறேன்" என்று வாலிப சகோதரனாகிய தீமோத்தேயுக்கு எழுதுகிறார். அது அவருக்குத் தானே நமக்கெதற்கு என்கிறீர்களா? அப்படியல்ல, நம்முடைய முற்பிதாவாகிய ஆபிரகாம் அப்படிப்பட்ட விசுவாசத்தை உடையவராக இருந்ததால் விசுவாசத்தின் தகப்பன் என்றழைக்கப்பட்டார். தீமோத்தேயுவின் பாட்டியும், தாயும் மாயமற்ற விசுவாசத்திலே வளர்ந்தவர்கள் அந்தப்படியே நீங்களும் வளரவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். உயர்குல திராட்சை செடியை நாட்டினால் உயர்குல திராட்சை பழங்களை பறிக்கலாம். அந்தப்படியே நம் முன்னோர்களின் மாயமற்ற விசுவாசத்தை உடையவர்களாயிருந்தால் அவர்களைப்போல ஆசீர்வதிக்கப்படுவோம்.

ஆபிரகாம் காணாததை நம்பினார். அதைப்போல நீங்களும் இதுவரை பெறாத ஆசீர்வாதங்களைப் பெறுவோம் என்ற நம்பிக்கையோடிருக்க வேண்டும். பரீட்சையில் பாஸ் பண்ணுவேன் என்ற நம்பிக்கையோடு பரீட்சைக்கு ஆயத்தமாகுங்கள். வெற்றி நிச்சயம். ஆபிரகாம் பிறனுடைய சரட்டைக்கூட இச்சிக்க வில்லை. அப்படியே நீங்களும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சித்து எடுத்துக் கொள்ளாதிருங்கள். மாயமற்ற விசுவாசமுள்ள முற்பிதாக்களைப்போல வாழ்ந்து மாறாத வாக்குத்தத்த ஆசீர்வாதங்களை தேவனிடத்தில் பெறுங்கள்.

உங்கள் அன்பு ஆசான்
**B.அர்ஜுனன்**

*மனப்பாட வசனம்:*

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" எபிரெயர்11:1

# வேத அறிவுப் போட்டி
## எண்.91

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

**கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.**

1. என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்ற ராஜா யார்?
2. உங்கள் விசுவாசத்தின் பலனாகிய எவ்விதமான இரட்சிப்பை அடைகிறீர்கள்?
3. ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்றுவஸ்திரங்களையும் தரவேண்டும் என்றுகேட்டு, என் எஜமான் என்னை அனுப்பினார் என்று பொய் சொன்ன உடன் ஊழியன் யார்?
4. தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்கு எதை வாக்குத்தத்தம்பண்ணுகிறார்கள்?
5. தங்கள் பிராணனையும் எண்ணாமல்போய் என் தாகத்திற்கு தண்ணீர் கொண்டுவந்த இந்த மனுஷரின் ரத்தத்தைக் குடிப்பேனோ என்ற ராஜா யார்?
6. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், எதன்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம்?
7. தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர் உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது என்று ஜெபித்த ராஜா யார்?
8. உங்களுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கு உங்களிடத்தில் வந்து, முகமுகமாய்ப் பேசலாமென்று நம்பியிருக்கிறேன் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. கர்த்தருடைய கற்பனைகளிலும், அவர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த கட்டளைகளிலும், படித்துத் தேறின வேதபாரகன் யார்?
10. நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய் செய்கிறாய் என்று யார் யாருக்கு எழுதுவது?

*"பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37)*


Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batagundu - 624 202 and printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlgundu - 624 202.
Editor : B. Arjunan.

**R.N.I. No. TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post Without Pre-Payment License No. TN/WPP-25/SR 2006-2008 Posted at Batlagundu Post Office on 10th March 2008.**



**ஆராதனை நேரம்** ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும்,உண்மையோடும்,
தொழுது கொள்ள யாவரையும் அன்புடன்அழைக்கிறோம்.

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
**MEETS HERE**
**17-2-102 D/5, Rajan Nagar, BATLAGUNDU - 624 202. Dindigul DIST.**



**உங்கள் வானொலியில்**
இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள்
மேலும்

**உங்கள் தொலைக்காட்சியில்**
**Sri - Every Sunday 6.15 a.m.**
**Tamilan - Every Monday 6.00 a.m.**
**Imayam - Every Thursday 6.15 a.m.**

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**
தேவைக்கு உடனே ரூ.15/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

**Radio & TV** யில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய CD & DVD க்கள்
விற்பனைக்கு உள்ளது. தேவைப்படுவோர் ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.
**சகலத் தொடர்புக்கும்**

Monthly Magazine

To

From

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box No. 5,*
*Batlagundu - 624 202*
*S.India.*

Phone : 04543 - 263278, Mobile : 94435 58041 e-mail : thewordofchrist@sancharnet.in